


ॐ

श्रीशङ्करभगवत्पादाचार्यविरचितं

पञ्चीकरणम्

ஸ்ரீமத்ஆதிசங்கரர் அருளிய

பஞ்சீகரணம்

ஸமாதி செய்யும் முறை



पञ्चीणं मूलम्
अथात: परमहंसानां समाधि विधि व्याख्यास्याम: ।
பஞ்சீகரணம் மூலபாடம்

ॐ । पञ्चीकृतपञ्चमहाभूतानि तत्कार्यं सर्वं विराडित्युच्यते । एतत्स्थूलशरीरमात्मन: । इन्द्रियैरर्थोपलब्धिर्जागरितम् । एतदुभयाभिमान्यात्मा विश्व: । एतत् त्रयमाकार: ।

अपञ्चीकृतपञ्चमहाभूतानि पञ्चतन्मात्राणि तत्कार्यं च पंचप्राणा: दशेन्द्रियाणि मनो बुद्धिश्चेति सप्तदशकं लिङ्गं भौतिकं हिरण्यगर्भ इत्युच्यते । एतत्सूक्ष्मशरीरमात्मन: । करणेषूपसंहृतेषु जागरितसंस्कारज: प्रत्यय: सविषय: स्वप्न इत्युच्यते । तदुभयाभिमान्यात्मा तैजस: । एतत्त्रयमुकार: ।

शरीरद्वयकारणमात्माज्ञानं साभासमव्याकृतमित्युच्यते । एतत्कारण शरीरमात्मान: । तच्च न सत्, नासत् । नापि सदसत् । न भिननं नाभिन्नम् । नापि भिन्नाभिन्नं कुतश्चित् । न निरवयवं, न सावयवं । नोभयम् । किन्तु केवलब्रह्मात्मैकत्वज्ञानापनोद्यम् । सर्वप्रकारज्ञानोपसंहारे बुद्धे: कारणात्मना ऽवस्थानं सुषुप्ति: । तदुभयाभिमान्यात्मा प्राज्ञ: । एतत्त्रयं मकार: ।

अकार उकारे, उकार मकारे, मकार ओंकारे, ओंकारोऽहम्येव । अहमात्मा साक्षी केवलश्चिन्मात्रस्वरूप: नाज्ञानं नापि तत्कार्यम् । किन्तु नित्यशुद्धबुद्धमुक्तसत्यस्वभावं परमानन्दाद्वयं प्रत्यग्भूतचैतन्यं ब्रह्मैवाहम स्मीत्यभेदेनावस्थानं समाधि: । 'तत्त्वमसि'(छा.उप.6.8.9) 'ब्रह्माहमस्मि' (परमहं.3) 'प्रज्ञानमानन्दं ब्रह्म' (ऐत.उप,बृह.उप.3.9) 'अयमात्मा ब्रह्म' (माण्डूक्य.1;बृह.2.5.9) इत्यादि श्रुतिभ्य: । इति पंचीकरणं भवति ।

इति श्रीमदाचार्यश्रीशङ्करस्वामि विरचितं पंचीकरणं समाप्तम् ।

****

பஞ்சீகரணம் தமிழ் அனுவாதம்

अथात: परमहंसानां समाधिविधिं व्याख्यास्याम: ।

அதாத: பரமஹம்ஸானாம் ஸமாதிவிதிம் வ்யாக்யாஸ்யாம:

பிறகு ஆகையினால், பரமஹம்ஸர்கள் என்ற ஸந்நியாஸிகளுக்கு ஸமாதியை செய்வது குறித்த விதியை வ்யாக்யானம் செய்வோமாக.

ॐ । पञ्चीकृत-पञ्चमहाभूतानि तत्कार्यं सर्वं विराड्-इत्युच्यते । एतत्-स्थूलशरीरम्-आत्मन: । इन्द्रियै:-अर्थ-उपलब्धिर्-जागरितम् । एतद्-उभयाभिमानी-आत्मा विश्व: । एतत् त्रयम्-अकार: ।

மூலம்:- ஓம். பஞ்சீக்ருத-பஞ்சமஹா பூதானி தத்-கார்யம் ஸர்வம் விராட்-இதி-உச்யதே । ஏதத்-ஸ்தூல சரீரம்-ஆத்மன: । இந்த்ரியை:-அர்த்த-உபலப்தி: -ஜாகரிதம் । ஏதத்-உபய-அபிமானீ-ஆத்மா விச்வ: । ஏதத்-த்ரயம்-அகார: ।

அனுவாதம்:-*ஓம். பஞ்சீக்ருதம் செய்யப்பட்ட ஐந்து மஹா பூதங்களும் அதனுடைய காரியங்களாகிய அனைத்தும் விராட் என்று சொல்லப்படுகின்றது. இதுவே ஆத்மாவின் ஸ்தூல சரீரமாகும். இந்திரியங்களால் (புலன்களால் ஸ்தூல) விஷயங்களை அறிவது ஜாக்ரதமாகும். இந்த (ஸ்தூல சரீரத்திலும், ஜாக்ரத அவஸ்தையிலும்) இரண்டிலும் அபிமானத்தை உடைய ஆத்மா விச்வனாவான். (ஸ்தூல சரீரம், ஜாக்ரத அவஸ்தை, விச்வன் என்ற) இந்த மூன்றும் சேர்ந்து (ஓங்காரத்தின் முதல் மாத்திரையாகிய) அகாரமாகும்.*

अपञ्चीकृत-पञ्चमहाभूतानि पञ्च-तन्मात्राणि तत्कार्यं च पंचप्राणा: दशेन्द्रियाणि मनो बुद्धिश्चेति सप्तदशकं लिङ्गं भौतिकं हिरण्यगर्भ इत्युच्यते । एतत्-सूक्ष्मशरीरम्-आत्मन: । करणेषु-उपसंहृतेषु जागरित-संस्कारज: प्रत्यय: सविषय: स्वप्न इत्युच्यते । तद्-उभयाभिमानी-आत्मा तैजस: । एतत्-त्रयम्-उकार: ।

மூலம்:- அபஞ்சீக்ருத-பஞ்சமஹா-பூதானி பஞ்ச-தந்மாத்ராணி தத்-கார்யம் ச பஞ்ச-ப்ராணா: தசேந்த்ரியாணி மனோ புத்திஸ்ச-இதி ஸப்த-தசகம் லிங்கம் பௌதிகம் ஹிரண்யகர்ப இதி-உச்யதே । ஏதத்-ஸூக்ஷ்ம சரீரம்-ஆத்மன: । கரணேஷு-உபஸம்ஹ்ருதேஷு ஜாகரித-ஸம்ஸ்காரஜ: ப்ரத்யய: ஸவிஷய: ஸ்வப்ந இதி-உச்யதே । தத்-உபய-அபிமானி-ஆத்மா தைஜஸ: । ஏதத்-த்ரயம்-உகார: ।

அனுவாதம்:-*பஞ்சீக்ருதம் செய்யப்படாத பஞ்சமஹா பூதங்களும் அதாவது தந்மாத்திரைகளும் (ஸூக்ஷ்ம பூதங்களும்) மற்றும் அதனுடைய காரியங்களாகிய பஞ்ச ப்ராணன்கள், பத்து இந்திரியங்கள் (பஞ்ச ஞானேந்த்ரியம், பஞ்ச கர்மேந்த்ரியம்), மனம் மற்றும் புத்தி என்ற பதினேழும் சேர்ந்த லிங்க சரீரம் (ஸூக்ஷ்ம சரீரம்) என்ற பூதங்களாலான, அதனிடத்தில் அபிமானத்தை உடையவன் ஹிரண்யகர்பன் என்று சொல்லப்படுகின்றான். இதுவே ஆத்மாவின் ஸூக்ஷ்ம சரீரமாகும். (கண்கள் முதலிய) கருவிகள் ஒடுங்கிய நிலையில், ஜாக்ரத அவஸ்தையின் ஸம்ஸ்காரத்தினால் (வாஸனையினால்-பதிவினால்) உண்டான, விஷயத்தோடு (காட்சிகளோடு) கூடிய மனதின் எண்ணங்கள் ஸ்வப்னம் என்று*

சொல்லப்படுகின்றது. (ஸூக்ஷ்ம சரீரம் மற்றும் ஸ்வப்ன அவஸ்தை என்ற) அந்த இரண்டிலும் அபிமானத்தை உடைய ஆத்மா தைஜஸன் ஆவான். (ஸூக்ஷ்ம சரீரம், ஸ்வப்ன அவஸ்தை, தைஜஸன் என்ற) இந்த மூன்றும் சேர்ந்து (ஓங்காரத்தின் இரண்டாவது மாத்திரையாகிய) உகாரமாகும்.

शरीरद्वय-कारणम्-आत्म-अज्ञानं साभासम्-अव्याकृतम्-इत्युच्यते । एतत्-कारण शरीरम्-आत्मन: । तत्-च न सत्, नासत् । न-अपि सदसत् । न भिनन्नं न-अभिन्नम् । न-अपि भिन्नाभिन्नं कुतश्चित् । न निरवयवं, न सावयवं । न-उभयम् । किन्तु केवल-ब्रह्म-आत्म-एकत्व-ज्ञान-अपनोद्यम् । सर्वप्रकारज्ञान-उपसंहारे बुद्धे: कारणात्मना-अवस्थानं सुषुप्ति: । तद्-उभयाभिमानी-आत्मा प्राज्ञ: । एतत्-त्रयं मकार: ।

<u>மூலம்</u>:- சரீர-த்வய-காரணம்-ஆத்ம-அக்ஞானம் ஸாபாஸம் - அவ்யாக்ருதம் இதி-உச்யதே । ஏதத்-காரண சரீரம்-ஆத்மன: । தச்ச ந ஸத், ந-அஸத் । ந-அபி ஸதஸத் । ந பின்னம் ந-அபின்னம் । ந-அபி பின்னாபின்னம் குதஸ்சித் । ந நிரவயவம், ந ஸாவயவம் । ந-உபயம் । கிந்து கேவல-ப்ரஹ்மாத்மைக்யத்வ-ஞான-அபனோத்யம் । ஸர்வ-ப்ரகார-ஞான -உபஸம்ஹாரே புத்தே: காரணாத்மனா – அவஸ்தானம் ஸுஷுப்தி: । தத்-உபய-அபிமானீ-ஆத்மா ப்ராக்ஞ: । ஏதத்-த்ரயம் மகார: ।

<u>அனுவாதம்</u>:- *ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்ற இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக இருக்கின்ற ஆத்மாவை அறியாத அக்ஞானம் என்ற ஆபாஸத்தோடு கூடியதாக (சொந்த இருப்பில்லாமல் தோற்றமாக மட்டும் இருப்பது) அவ்யாக்ருதம் என்று சொல்லப்படுகின்றது. இதுவே ஆத்மாவினுடைய காரண சரீரம் ஆகும். அது இருப்புள்ள ஸத்தும் அல்ல. இருப்பில்லாத அஸத்தும் அல்ல. அது ஆத்மாவிற்கு வேறானதும் அல்ல. வேறில்லாததும் (அபின்னமும்) அல்ல. மேலும், அது இணைந்ததும்- இணையாததுமல்ல (அதாவது உபய ரூபமுமல்ல). அது அவயவங்க ளற்றதுமல்ல. அவயவங்களுள்ளதுமல்ல. ஆனால், வெறும் ப்ரஹ்மாத்மைக்யத்வ (ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்ற) ஞானத்தினால் மட்டும் போக்கடிக்கத் தக்கதாகும். புத்தியில் உள்ள அனைத்து விதமான எண்ணங்களும்-அறிவுகளும் லயமான(ஒடுங்கிய) நிலையில் எந்த காரண ரூபமான ஸ்திதியானது-நிலையானது உண்டாகின்றதோ, அதுவே ஸுஷுப்தி என்று சொல்லப்படுகின்றது. (காரண சரீரம் மற்றும் ஸுஷுப்தி அவஸ்தை என்ற) இரண்டிலும் அபிமானத்தை உடையவன் ப்ராக்ஞன் ஆவான். (காரண சரீரம் ஸுஷுப்தி அவஸ்தை மற்றும் ப்ராக்ஞன் என்ற) மூன்றும் சேர்ந்து (ஓங்காரத்தின் மூன்றாவது மாத்திரையாகிய) மகாரம் ஆகும்.*

अकार उकारे, उकार मकारे, मकार ओंकारे, ओंकारो-अहम्-एव । अहम्-आत्मा साक्षी केवल:-चिन्मात्रस्वरूप: न-अज्ञानं न-अपि तत्कार्यम् । किन्तु नित्य-शुद्ध-बुद्ध-मुक्त-सत्यस्वभावं परमानन्द-अद्वयं प्रत्यग्भूतचैतन्यं ब्रह्म-एव-अहमस्मि-इति-अभेदेन-अवस्थानं समाधि: । 'तत्त्वमसि'(छा.उप.6.8.9) 'ब्रह्माहमस्मि'(परमहं.3) 'प्रज्ञानमानन्दं ब्रह्म' (ऐत.उप, बृह.उप.3.9) 'अयमात्मा ब्रह्म' (माण्डूक्य.1; बृह.2.5.9) इत्यादि श्रुतिभ्य: । इति पंचीकरणं भवति ।

इति श्रीमदाचार्यश्रीशङ्कर भगवत्पाद विरचितं पंचीकरणं समाप्तम् ।

<u>மூலம்</u>:- அகார உகாரே, உகார மகாரே, மகார ஓங்காரே, ஓங்காரோ-அஹம்-ஏவ । அஹம்-ஆத்மா ஸாக்ஷீ கேவல-சிந்மாத்ர-ஸ்வரூப: ந-அக்ஞானம் ந-அபி தத்-கார்யம் । கிந்து, நித்ய-சுத்த-புத்த-முக்த-ஸத்ய-ஸ்வபாவம் பரமானந்த-அத்வயம் ப்ரத்யக்பூத-சைதன்யம் ப்ரஹ்ம-ஏவ-அஹம்-அஸ்மி-இதி-அபேதேன-அவஸ்தானம் ஸமாதி: । 'தத்த்வமஸி'(சாந்.உப.6-8-9) 'ப்ரஹ்மாஹமஸ்மி' (பரமஹம்ஸ.உப.3) 'ப்ரக்ஞானம் ப்ரஹ்ம' (ஐத.உப,ப்ருஹ.உப.3-9) 'அயமாத்மா ப்ரஹ்ம'(மாண்டூ.உப.2, ப்ருஹ.உப.2-5-9) இத்யாதி ச்ருதிப்ய: । இதி பஞ்சீகரணம் பவதி ।

।। இதி ஸ்ரீமத் ஆச்சார்ய ஸ்ரீசங்கர பகவத்பாத விரசிதம் பஞ்சீகரணம் ஸமாப்தம் ।।

<u>அனுவாதம்:</u>-*அகாரத்தை உகாரத்திலும், உகாரத்தை மகாரத்திலும், மகாரத்தை ஓங்காரத்திலும் ஒடுக்க வேண்டும்(லயம் செய்ய வேண்டும்) (அந்த) ஓங்காரம் நானே ஆவேன். ஆத்மாவாகிய நான் ஸாக்ஷியாவேன் –கேவலம் சிந்மாத்ர ஸ்வரூபமாவேன் (வெறும் தனித்த பேருணர்வையே இயல்பாக உடையவன் ஆவேன்). நான் அக்ஞானமும் அல்ல. அக்ஞானத்தின் கார்யமும் நான் அல்ல. அவ்வாறாகில் நான் யார் எனில்?, நித்ய-சுத்த-புத்த-முக்த-ஸத்ய ஸ்வபாவமாக, பரமானந்த அத்வய ரூபமாக, ப்ரத்யக் (அனைத்துள்ளும் இருக்கின்ற நான் என்ற) சைதன்யமாகிய ப்ரஹ்மமாகவே நான் இருக்கின்றேன் – என்று அபேதமாக (எதனோடும், எவ்விதமான பேதமும் – பிரிவினையும் இல்லாமல் இருப்பது) நிலை பெறுவது ஸமாதியாகும்.* ***'தத்வமஸி'*** *(நீ அதுவாகவே இருக்கின்றாய்),* ***'அஹம் ப்ரஹ்மாஸ்மி'*** *(நான் ப்ரஹ்மமாகவே இருக்கின்றேன்) என்ற முதலான ச்ருதிகளும் இதனையே கூறுகின்றன.*

இதுவே பஞ்சீகரணம் ஆகும்.

இவ்வாறு ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர் எழுதிய பஞ்சீகரணம் என்ற நூல் பூரணமாயிற்று.

****

